பக்கங்கள்: நான்கு Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 4.00

சுடர்: 6 பிரமோதூத ஞு மாசி மீ 11 உ சனிக்கிழமை (23-02-1991) UTHAYAN - A Lively Tamil National Daily கதிர்: 88

### சமரச திட்டம்:- சதாம் ஏற்பு; புஷ் நிராகரிப்பு

# ஈராக்கிய படை விலக இறுதிக் காலக்கெடு!

## இன்றிரவு 10.30 மணி வரை அவகாசம் அமெரிக்கத் தரப்பு வழங்கியது

லண்டன், பெப்ரவரி 23

சோவியத் அதிபர் கோர்பச்சேவின் சமரச யோசனையின் படி குவைத்திலிருந்து தனது படைகளை நிபந்தனையின்றி விலக்கிக் கொள்ள ஈராக் இணங்கியிருப்பதாக சோவியத் அரசு நேற்று அறிவித்தது. ஆனால் அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ் இந்த யோசனையை நிராகரித்தார்.

உடனடியாக — நிபந்தனையின்றி — விலகுவதாக இன்று நண்பகலுக்கு முன்னர் [இலங்கை நேரப்படி இன்றிரவு 10.30 மணிக்கு முன்னர்] ஈராக் அறிவிக்க வேண்டும் என்றும் —

குவைத் தலைநகரை விட்டு 2 நாட்களுக்குள்ளும், குவைத்தை விட்டு ஒரு வாரத்திற்குள்ளும் விலக வேண்டும் என்றும் —

இல்லையேல் பன்னாட்டுப் படைகளின் தரைத் தாக்குதல் முனைப்புடன் மேற்கொள்ளப்படும் என்றும் அமெரிக்க ஜனாதிபதி புஷ் இறுதி காலக்கெடு விதித்திருக்கிறார்.

படை விலகலுக்கு தாம் இணங்கியிருப்பதை ஈராக் அதிபர் சதாம் ஹுசேன் பகிரங்கமாக ஒப்புக்கொள்ள வேண்டும் என்றும் புஷ் நிபந்தனை விதித்தார்.

குவைத்திலிருந்து ஈராக் படைகள் முற்றாக விலக்கப் படுவதற்கு முன்னர் ஐ. நா. தீர்மானங்களை வாபஸ் பெற வேண்டும் என்ற நிபந்தனையை சோவியத் சமரசத் திட்டம் கொண்டிருப்பதால் அந்த யோசனையை தாங்

[3 ஆம் பக்கம் பார்க்க]

## கிளிநொச்சி குண்டு வீச்சில் 5 மாணவர்கள் காயம்

கிளிநொச்சி, பெப். 23

கிளிநொச்சி 7 ஆம் வாய்க்கால் இந்து மகா வித்தியாலயத்துக்கு மிகச் சமீபமாக நேற்றுக்காலை 8 மணியளவில் நடத்தப்பட்ட பொம்மர் குண்டு வீச்சில் மாணவ, மாணவியர் 5 பேர் காயமடைந்தனர். இவர்களில் ஒரு மாணவன் தமது வலது காலை இழந்து விட்டார். நான்கு வீடுகளும் சேதமடைந்தன.

காலையில் பாடசாலைக்கு வந்து கொண்டிருந்த மாணவர்கள்— பாடசாலை வளவுக்

[3 ஆம் பக்கம் பார்க்க]

## முல்லை மாவட்டத்திலும்

யாழ்ப்பாணம், பெப். 23

முல்லைத்தீவு மாவட்டத்தில் வட்டுவாகல், தண்ணீரூற்று, முள்ளியவளை ஆகிய பகுதிகளில் நேற்று முன்தினம் காலை 8 மணி முதல் 8. 40 மணிவரை கடும் விமானத் தாக்குதல்கள் இடம்பெற்றன.

இந்தத் தாக்குதல்களில் விக்னேஸ்வரன் புஷ்பன் என்பவர் படுகாயமடைந்தார். ஐந்து வீடுகள் முற்றாகச் சேதமடைந்தன. [உ]

## முச்சந்தி முரளி



சுத்திக் கத்திப் பேசி களைச்சிருப்பினம். அதாலை இனி கத்தியாலை பேசவும் எண்டு முடிவு செய்திட்டினம் போல......

## அன்னையர் கூட்டத்துக்கு தமிழ்த் தாய் தலைமை

கொழும்பு, பெப். 23

கொழும்பில் கடந்த 19 ஆம் திகதி அங்குரார்ப்பணம் செய்யப்பட்ட அன்னையர் முன்னணி அமைப்புக்கு பெரு வரவேற்பு கிடைத்துள்ளது.

முன்னணியின் அங்குரார்ப்பணக் கூட்டத்திற்கு மட்டக்களப்பைச் சேர்ந்த திருமதி கஜிவர்தனம், டாக்டர் திருமதி மனோராணி சரவணமுத்து, தென்.

[3 ஆம் பக்கம் பார்க்க]

## திடீர் பொதுத் தேர்தல் வரும் என்கிறார் சிறிமா

கொழும்பு, பெப்,23

திடீர் நாடாளுமன்றப் பொதுத் தேர்தல் ஒன்றைச் சந்திக்க மக்கள் தயாராக இருக்க வேண்டும்.

எதிர்க்கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா கடந்த வியாழக்கிழமை கொழும்பில் இடம்பெற்ற எதிர்க்கட்சிகளின் பொதுக் கூட்டத்

[3 ஆம் பக்கம் பார்க்க]

## ஆளும் கட்சி எம்.பிக்கள் கத்தியால் தாக்கினராம்!

கொழும்பு, பெப். 23

கடந்த வியாழன் நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற கைகலப்பில் ஆளும் கட்சி எம்.பிக்கள் எதிர்க்கட்சி எம்.பிக்களை கத்தி போன்ற ஆயுதங்களால் தாக்க முற்பட்டனர்,

எதிர்கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா செய்தியாளர் மாநாடு ஒன்றில் பேசுகையில் இவ்வாறு தெரிவித்தார். [உ-எ]

## ரகளைக்கு வாசுவே காரணம் ரஞ்சன் குற்றம் சுமத்துகிறார்

கொழும்பு, பெப். 23

அவசரகாலச் சட்ட நீடிப்பு பிரேரணையை நேற்று நாடாளுமன்றத்தில் முடித்து வைத்துப் பேசிய அமைச்சர் ரஞ்சன் விஜேரத்னா வியாழன் சபையில் நடந்த ரகளைக்கு வாசுதேவ நாணயக்காராவே காரணம் என்று குற்றம் சுமத்தினார்.

''நாடாளுமன்ற ஜனநாயகத்தை கடந்த காலங்களில் வாசுதேவ நாணயக்காரா புறக்கணித்து நடந்து வந்ததன் எதிரொலியே இந்தச் சம்பவம். இந்தச், சம்பவத்தில் இருந்து நாம் பாடம் படிக்க வேண்டி உள்ளது'' என்றார் அவர்.

முன்னர் ஒரு முறை திரு. வாசுதேவ நாணயக்காரா தம்மை ''தக்கடியா'' [ரௌடி] என்று நாடாளுமன்றத்தில் வைத்து அழைத்ததாகவும் அமைச்சர் விஜேரத்னா சொன்னார். [உ-எ]

## அனுப்பியது ரூ. 2 கோடிக்கு வந்தது ரூ.5½ லட்சத்துக்கே

யாழ்ப்பாணம், பெப். 23

வடக்கு - கிழக்கு மாகாணத்துக்கு அவசர உதவியாக யுனிசெப் மூலம் இரண்டு கொடி ரூபா பெறுமதியான மருந்து வகைகளை அமெரிக்க அரசு அனுப்பி இருந்தது. ஆனால் யாழ். மாவட்டத்துக்கு ஐந்தரை லட்சம் ரூபா பெறுமதியான மருந்துவகைகளே கிடைத்துள்ளன.

அமெரிக்க அரசால் வழங்கப்பட்ட ஐந்து லட்சம் அமெரிக்க டொலர் [இரண்டு கோடி ரூபா] பெறுமதியான மருந்து மற்றும் தடுப்பு மருந்துகளில் 5 லட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான மருந்து வகைகளே பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் ஊடாக இங்கு வந்து சேர்ந்தன எனத் தெரிவிக்கப்பட்டது. [உ-3]

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

மில்க்வைற் திரவ சவர்க்காரம் Liquid Soap வீட்டுச் சலவைக்குத்துரிதமானது. சிக்கனமானது. சுத்தமான வேப்பெண்ணெய் மருத்துவ, விளக்கெரிக்கும்தேவைக்கு. நல்லூர் ப. நோ. கூ. சங்கத்திலும்விற்பனையாகிறது.

[சி-5795]

கண்ணாடிமேசைகள், கட்டில்கள், மெத்தைகள், சிங்கர் தையல் மெஷின், சாப்பாட்டு மேசை, லாச்சியுடன் கவுண்டர்மேசை, கதிரை, வீட்டுக் கதவுகள், பனைமரங்கள், சிலாகைகள், சீற்முகட்டு ஓடுகள் எம்மிடம் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 07, கைலாசபிள்ளையார் கோவில் பின் வீதி, நல்லூர்.

[15899]

### கல்வி

பாலர் ஆசிரியர் பயிற்சி நெறி [1991-03-02] ஆரம்பமாகும். கா. பொ. த [சா/த] சித்தி முக்கியம். நேரில் வர முடியாதோர் தபால் வழியிலும் பயிலலாம். முகவரி: பாலர் ஆசிரியர் சங்கம், மே/பா உயர் கலைக்கல்லூரி, 73, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்

[15896]

### நீர் நிலையியல்

க. பொ. த உயர்தர மாணவர்களுக்கு வரப்பிரசாதம் இந்நூல் கடந்தகாலப் பரீட்சை வினாக்களின் அடிப்படையில் உருவாக்கப்பட்டது. [ஆக்கியோன் P. வேலாயுதபிள்ளை B.Sc, S. பிரேம்நாத் B.Sc.] போட்டோஸ்ரற் பிரதிகளும் உடன் செய்யலாம். ஸ்ரீகாந் புத்தகசாலை, நல்லூர்; மக்மிலன் புத்தகசாலை, பஸ்நிலையம், யாழ்ப்பாணம்.

[15886]

### சேவை

நல்ல தரமான, நியாய விலையில் மதிய உணவுப் பார்சல் மற்றும் சிற்றுண்டி வகைகள் இலங்கை கனடியன் அபிவிருத்தி நிதி உதவியுடன் உணவு வழங்கும் சேவைத் திட்டத்தின் கீழ் வழங்குகிறோம். தேவையானவர்கள் முன் அறிவித்தல் கொடுத்து சிற்றுண்டிச் சாலையில் பெற்றுக்கொள்ளலாம். சைவ வித்தியா விருத்திச் சங்கம், கலாசாலை வீதி, திருநெல்வேலி.

[கி/5774]

### தேவை

பாலர் வகுப்பிலிருந்து A/L வரை தங்களால் இயன்ற பாடங்களைக் கற்பிக்கக்கூடிய ஆசிரியர்கள் தேவை. ஆண்டு 6 லிருந்து ஆண்டு 11 வரைக்குமுள்ள கணித பாடத்திற்கு விடை தயாரிப்பதற்கு ஆட்கள் தேவை. மாலை 2-00 — 3-00 ற்குள் நேரடியாகச் சந்திக்கவும். ஆறுமுகநாதன், 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, லோகேந்திரா வீதி, சுண்டிக்குளி.

[15893]

### விற்பனைக்கு

யாழ். பல்கலைக்கழக விகிதர், தொழில்நுட்பவியலாளர் போட்டிப் பரீட்சைக்கான வழிகாட்டி, நுண்ணறிவு I. Q. விலை 56.50 அஸ்ரன் வெளியீடு எல்லாப் புத்தகசாலைகளிலும் பெற்றுக் கொள்ளலாம்.

[சி/5780]

### புத்தகங்கள்

வர்த்தகமும், நிதியும் 1 [உயர்தரவகுப்புகளுக்குரியது] ஆக்கம் தே. ஜெயராமன் B. com, M. B. A. [விரிவுரையாளர் யாழ். பல்கலைக் கழகம்] விலை ரூபா 48/- வெளியீடு விற்பனை பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம்.

[சி 5785]

### புலமைப் பரிசில் பரீட்சை

மார்ச் மாதம் நடைபெறவுள்ள ஆண்டு 5 புலமைப் பரிசில் பரீட்சைக்கான Paper Class சனி, ஞாயிறு 10-30 — 12-00 நடைபெறவுள்ளது. ஆரம்பம்:- 23 - 02 - 91 சனி 10-30 புதிய ஆண்டு 5 இற்கும் புலமைப்பரிசில் வகுப்புகள் Morning Class, Evening Class நடைபெறுகின்றன. ஆண்டு 4 தொடக்கம் ஆண்டு 11 வரை சகல பாடங்களும் கற்பிக்கப்படுகின்றன. புதிய கல்வி நிலையம், 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

[15890]

### விற்பனைக்கு

சாயிபாபாவின் அழகிய வர்ண ஸ்ரிக்கேர்ஸ் மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனைக்குண்டு. 266/1, ஸ்ரான்லி வீதியில் உள்ள ஸ்ரீ சாயிறாம் புத்தகசாலையில் தொடர்பு கொள்ளவும். [விக்னா ரியூஷன் சென்ரர் அருகாமை].

[15783]

### புத்தகங்கள்

புதிய உயர்தர விலங்கியல் பகுதி II ஆசிரியர் K. சங்கர ஐயர் B.Sc [கரப்பான் பூச்சியும், முள்ளந்தண்டு விலங்குகளின் உதாரணமாக தேரையும், விளக்கப்படங்களுடன் வெளிவந்துள்ளது] விலை ரூபா 37-50 வெளியீடு: விற்பனை பூபாலசிங்கம் புத்தகசாலை யாழ்ப்பாணம்.

[கி-5779]

## ஜெயலலிதா ஆட்சிக்கு வந்தால்...!

சென்னை, பெப்,23

அ. தி. மு. கழகம் பதவிக்கு வந்தால், தி. மு. க. வுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே இருந்த தொடர்புகள் பற்றி விசாரணை நடத்தப்படும்.

—இப்படி அ. தி. மு. க. பொதுச் செயலாளர் செல்வி ஜெயலலிதா சொன்னார்.

[ஒ-எ]

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

செல்வர்கள்

## அருண்ராஜ் - சரண்ராஜ்

நல்லூரில், கச்சேரி நல்லூர் றோட் மூத்தவிநாயகர் வீதியைச் சேர்ந்த இராசலிங்கம் நிர்மலேஸ் தம்பதிகளின் செல்வப் புதல்வர்கள் அருண்ராஜ்-சரண்ராஜ் ஆகியோர் தமது முதலாவது பிறந்தநாளை இன்று [23-02-91] கொண்டாடுகிறார்கள்.

இவர்களை அப்பா, அம்மா, அண்ணன்மார், அப்பப்பா, அப்பம்மா, தாத்தா, அம்மம்மா, பெரியப்பாமார், பெரியம்மாமார், மாமன்மார், மாமிமார், ஜேர்மனியில் உள்ள தயானந்தன் மாமா, மகேஸ் மாமி, மச்சாள்மார், குயின்ஸி, ஜான்சி, பிரின்சி சித்தப்பாமார், சித்திமார் பல்கலையும் பயின்று பல்லாண்டு வாழ்க என வாழ்த்துகிறார்கள்.

[15953]

### தடைப்பட்ட O/L 90 பரீட்சைக்கு தோற்றவிருந்த மாணவர்களுக்கு மாதாந்த பயிற்சிப் பரீட்சையும், இலவச கருத்தரங்கும்

- ★ ஒவ்வொரு போயா விடுமுறை தினங்களிலும் பரீட்சை நடத்தப்படும் - முதல் பரீட்சை 28-2-91.
- ★ எல்லாப் பாடங்களிலும் பகுதி - I மட்டும் நடத்தப்பட்டு, உடனடியாகத் திருத்தி விடைத்தாள் வழங்கப்படும்.
- ★ எமது நிறுவனத்தில் கற்கின்ற, கற்காத அனைத்து மாணவர்களும் பங்கு பற்றலாம்.

மேலதிக விவரங்களுக்கு:

**BOND INSTITUTES**

58 A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

[15952]

## விண்ணப்ப முடிவு திகதி நீடிப்பு

யாழ்ப்பாணக்கல்லூரி ஆசிரியர் பதவிகளுக்கான விண்ணப்ப முடிவுத் திகதி 31 - 03 - 91 ஆகும். 01 - 03 - 91 அல்ல.

அதிபர்.

[சி-5794]

## தேவை

### மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயம்

மானிப்பாய்

மேற்படி ஆலய முகாமையாளர் பதவிக்கு தகுதியுள்ள சைவசமயத்தவர் ஒருவர் கீழ்க் காணும் விலாசத்துக்கு 10-03-91ற்கு முன் கிடைக்கத்தக்கதாக விண்ணப்பிக்கவும்.

50 வயதுக்கு மேற்பட்ட, இளைப்பாறிய, அரசாங்க, கூட்டுத்தாபன அல்லது வேறு ஸ்தாபனத்தில் கடமையாற்றிய உத்தியோகத்தராகவும், சமயத் தொண்டில் நாட்டமும், அனுபவமும் உள்ளவராகவும், ஆலயத்துக்கு சமீபமாக வசிப்பவராகவும் இருத்தல் விரும்பத்தக்கது.

ஏனைய விவரங்கள் நேரில்.

ந. சிவசுப்பிரமணியம்,
செயலாளர்,
மானிப்பாய் மருதடி விநாயகர்,
ஆலய தர்மகர்த்தா சபை

மருதடி விநாயகர் ஆலயம்,
மானிப்பாய்.

[15900]

## மரண அறிவித்தல்

திருமதி

### கலாநாயகி சூரியகுமார்

[முன்னாள் பருத்தித்துறை மெதடிஸ் மிசன் பெண்கள் உயர் கல்லூரியின் இசை ஆசிரியையும், இலங்கை வானொலி இசைக்கலைஞரும்]

சங்கீதரெத்தினம் திருமதி கலாநாயகி சூரியகுமார் 12 - 02 - 91 மேற்கு ஜேர்மனியில் காலமானார்.

இவர் சூரியகுமாரின் [முன்னாள் வட பிராந்திய போக்குவரத்துச் சபை கணக்காளர்] அன்பு மனைவியும், கௌசிகன், பிரதிபன் ஆகியோரின் அன்புத் தாயாரும், கட்டைப்பிராயைச் சேர்ந்த ஆசிரிய வித்துவான் சு. சின்னத்தம்பி தம்பதிகளின் அன்புமகளும், திரு. திருமதி பாலகிருஷ்ணசாமியின் அன்பு மருமகளும் [யாழ். வீதி], சிவகுமார் [Canada], ஐங்கரன் [France], பாலசுப்பிரமணியம் [Germany], திருமாவளவன் [ஆசிரியர், யா/பத்தமேனி வித்தியாசாலை], கருணைநாயகி, மனோரஞ்சினி, தயாரஞ்சினி [Canada, முன்னாள் சுருக்கெழுத்தாளர். வேலணை ஆரம்ப நீதிமன்றம்], சிவசக்தி [Canada, முன்னாள் தாதி, யா/போதனா வைத்தியசாலை], சிவகாமி ஆகியோரின் அன்புச் சகோதரியும், சிவரெட்ணம், மகேந்திரன் [Australia], ஜெயசிங்கம் [Canada, முன்னாள் விவசாய உத்தியோகத்தர் வேலணை], துரைச்சாமி [Canada], திருமதி சிவகுமார் [Canada], யசோதா, விஜயகுமார் [Canada], ஜெயந்தி [Italy], தங்கராஜா, தமயந்தி [Germany] ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 19-02-91 ல் மேற்கு ஜேர்மனியில் நடைபெற்றது என்பதை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகிறோம்.

தகவல்:
சி. திருமாவளவன்.

கட்டைப்பிராய்,
கோப்பாய் தெற்கு,
கோப்பாய்.

[15955]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## அரசியல் காடைத்தனம்

ஸ்ரீலங்கா நாடாளுமன்றத்தில் கடந்த வியாழக்கிழமை பெரும் அடிதடி, ரகளைகள் ஏற்பட்டன. எதிர்க்கட்சி எம். பி. ஒருவர் அரச தரப்பு எம். பிக்களினால் நையப் புடைக்கப்பட்டார். இந்தக் கைகலப்புகளில் 15 எம். பிக்கள் வரை காயம் அடைந்தனர் என்று கூறப்படுகிறது. தாக்குதல்களில் அமைச்சர்கள் சிலரும் கலந்து கொண்டனர்.

ஸ்ரீலங்கா நாடாளுமன்றத்தில் மோதல்கள் ஏற்பட்டமை இது முதலாவது தடவை அல்ல. எம். பிக்கள் மோதிக் கொண்ட சம்பவங்கள் இதற்கு முன்னரும் பல தடவைகள் இடம்பெற்றுள்ளன.

ஆனால் நேற்று முன்தினம் இடம்பெற்ற சம்பவங்கள் மிகவும் மோசமானவை. சனநாயக அநாகரிகத்தனம் மிக்கவை.

நேற்று முன்தினம் ஸ்ரீலங்கா நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற சம்பவத்தில் சபர்நாயகர் ஆசனத்தில் அமர்ந்த எதிர்க்கட்சி உறுப்பினர் ஒருவர் அரச தரப்பினரால் கடுமையாகத் தாக்கப்பட்டுள்ளார்.

நாடாளுமன்ற விதிகளை மீறுபவரை நாடாளுமன்றப் பாதுகாவலர்கள் வெளியேற்றுவதே நடைமுறை. ஆனால், இங்கே நாடாளுமன்றப் பாதுகாவலர்களின் பொறுப்பை அரச தரப்பு எம். பிக்கள் மட்டும் அல்ல சில அமைச்சுக்களும் எடுத்துக் கொண்டுவிட்டனர். ஒரு படி மேலே சென்று காடைத்தனத்திலும் இறங்கி உள்ளனர். வெளியில் நிலவும் அரசியல் காடைத்தனம் கீர்த்திக்குரிய சபைக்கு உள்ளேயும் புகுந்து விட்டது. வெட்கம்!

ஸ்ரீலங்காவைப் பொறுத்தவரை அரச காடைத்தனம் மக்களுக்குப் புதியதல்ல. அரச அனுசரணையுடன் உருவான ''பச்சைப் புலி''களால் ஏற்கனவே நூற்றுக்கணக்கானோர்கள் கொல்லப்பட்டுள்ளனர். நூற்றுக்கணக்கானவர்கள் பற்றித் தகவலே இல்லை.

இதற்கு முதல் ஜே. ஆரின் ஆட்சிக்காலத்தில் தொழிற்சங்கப் போராட்டங்களும் இதே வழியிலேயே அடக்கப்பட்டிருந்தன. இதன் தொடர் நிகழ்ச்சியே நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சி உறுப்பினர் மீது நடத்தப்பட்ட தாக்குதலும் ஆகும்.

நாடாளுமன்றத்தில் இப்படி மற்போர் புரிபவர்கள் நாட்டை முறையாக ஆட்சி செய்வார்களா? தமிழரின் உரிமையை இவர்களால் வழங்க முடியுமா? காட்டுமிராண்டித்தனம் மேலோங்கி உள்ள அரசியல்வாதிகள் மற்றவர்களின் உரிமைகளை உணர்ந்து கொள்வது எப்படி? அவர்களிடம் அரசியல் பண்பை, நியாயத்தை எதிர்பார்ப்பது எப்படி?

## ராணுவ தாக்குதலினால் செஞ்சிலுவை வாகனம் சேதம்

யாழ்ப்பாணம், பெப். 23

நேற்று முன்தினம் மாலை 4 மணியளவில் திருகோணமலை மாவட்டம் மூதூரிலிருந்து வெருகல் நோக்கி வந்து கொண்டிருந்த செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் வாகனம் ஒன்று ஸ்ரீலங்கா இராணுவத்தினரின் தாக்குதலுக்கு இலக்காகி சேதமுற்றதாகத் தெரிவிக்கப்பட்டது. [உ]

## முல்லையில் வீரமரணம்

யாழ்ப்பாணம், பெப்.23

நேற்று முன்தினம் மாலை 4 மணியளவில் முல்லைத்தீவு இராணுவ முகாமிலிருந்து சிலாவத்தைப் பக்கமாக வெளியேற முயன்ற இராணுவத்தினருடன் நடந்த சண்டையில் விடுதலைப் புலிகள் இயக்கப் போராளியான புஷ்பராஜா [தியாகராஜா அகிலன்– நீர்வேலி] வீரமரணமடைந்தார். [உ]

## அத்தியாவசிய சேவைகள் ஆஸ்பத்திரியில் ஸ்தம்பிதம்

யாழ். ஆஸ்பத்திரியிலுள்ள ஜெனரேட்டர் [55 கே. வி.] திடீரென நேற்று பழுதடைந்ததால், பல அத்தியாவசிய சேவைகள் ஸ்தம்பிதம் அடைந்தன.

எக்ஸ்றே, தண்ணீர் விநியோகம், உபகரணங்கள் தொற்று நீக்கும் பகுதி போன்ற முக்கிய சேவைகள் பெரிதும் பாதிப்புற்றன.

எனினும் சத்திர சிகிச்சைப் பிரிவு மாத்திரம் 27.5 கே. வீ ஜெனரேட்டர் மூலம் இயங்கி வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. [ஓ-15]

## டாக்டர்களுக்கு பெற்றோல்

யாழ்ப்பாணம், பெப்.23

யாழ். ஆஸ்பத்திரி டாக்டர்களின் வாகனங்களுக்கு நேற்று கட்டுப்பாட்டு விலையில் பெற்றோல் வழங்கப்பட்டது.

ஆஸ்பத்திரி நிர்வாகம் எடுத்த முயற்சியை அடுத்தே டாக்டர்கள் ஒவ்வொருவருக்கும் 4 லீட்டர் வீதம் பெற்றோல் விநியோகிக்கப்பட்டது. [ஓ-15]

## மருத்துவ பீட பரீட்சைகள் முடிவுகள் வெளியாகின

யாழ்ப்பாணம், பெப்.23

யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீட மூன்றாம் ஆண்டு, இரண்டாம் ஆண்டு பரீட்சை முடிவுகள் நேற்று வெளியாகின.

இதே பரீட்சைகளுக்கு கொழும்பில் தோற்றிய மாணவர்களின் முடிவுகள் இதில் அடங்கவில்லை என்று மருத்துவ பீடாதிபதி தெரிவித்தார்.

மூன்றாம் ஆண்டு பரீட்சையில் ஒரு மாணவி முதலாம் வகுப்பிலும், 11 பேர் இரண்டாம் வகுப்பிலும் சித்தி பெற்றுள்ளனர். 22 பேர் சாதாரண சித்தி அடைந்துள்ளனர். [ஓ-6]

## திடீர் பொதுத்..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

தில் பேசுகையில் இவ்வாறு தெரிவித்தார்.

''உண்மையான ஜனநாயகத்தை நிலை நாட்ட அனைத்து எதிர்க்கட்சிகளும் ஒன்று சேரவேண்டும். ஜனாதிபதி பிரேமதாஸாவின் சர்வாதிகார நிர்வாகத்தை முறியடிக்க வேண்டும்''- என்றார் அவர்.

விலைவாசி உயர்வு மற்றும் மனித உரிமை மீறல் நடவடிக்கைகளை எதிர்த்து - பிரேமதாஸா அரசுக்கு எதிராக - நடத்தப்பட்ட இந்தப் பொதுக் கூட்டத்தில் மக்கள் கூட்டம் அலைமோதியது குறிப்பிடத்தக்கது. [உ-எ]

## அன்னையர்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

மாகாணத்தைச் சேர்ந்த திருமதி சீலாவதி ஆகியோர் தலைமை வகித்தனர்.

மாநாட்டில் கலந்து கொண்ட தாய்மார்கள் தமது அன்புக்குரியவர்களை இழந்ததுயரை விவரித்தனர். மாநாட்டில் சமூகமளித்திருந்த மேற்கத்தைய நாடுகளின் தூதரக அதிகாரிகள், பல வெளிநாட்டுச் செய்தியாளர்கள், சர்வதேச தொலைக்காட்சிப் பிரதிநிதிகள் இவற்றைக்கேட்டு அதிர்ச்சி அடைந்தனர்.

மட்டக்களப்பைச் சேர்ந்த திருமதி கஜிவர்தனம் வந்தாறுமூலையில் தமது மகனுக்கு ஏற்பட்ட நிலையை அழுதழுது விவரித்தார்.

அவரது தமிழ் உரை சிங்களத்தில் மொழி பெயர்க்கப்பட்டது. அதனைக் கேட்டு கூடியிருந்த பெண்கள் பலர் விசித்து விசித்து அழுதனர். [ஓ-5]

## ஏறாவூர் சம்பவத்தில் 20 தமிழர்கள் பலி?

கொழும்பிலிருந்து மட்டக்களப்பு நோக்கி மினி பஸ்ஸில் வந்த தமிழ் பயணிகளை நேற்று முன்தினம் குடியிருப்பு என்ற இடத்தில் வைத்து முஸ்லிம் ஊர்காவலர்கள் துப்பாக்கியால் சுட்டும், வெட்டியும் தாக்கியதால் 20 தமிழர்கள் வரை உயிரிழந்திருக்கலாம்.

—இவ்வாறு தமிழ் அரசியல் வாதிகள் சிலரை மேற்கோள் காட்டி வெரித்தாஸ் அறிவித்தது.

இந்தச் சம்பவத்தில் ஆறு பேர் உயிரிழந்தனர் என்று ஊர்ஜிதப்படுத்தப்பட்டிருக்கிறது

சம்பவத்தில் தப்பிய சிலர் காடுகளுக்குள் தஞ்சமடைந்து பின்னர் நேற்று பாதுகாப்பாக தமது இடங்களுக்குத் திரும்பியதாக ஊர் மக்கள் தெரிவித்தனர் என்றும் வெரித்தாஸ் அறிவித்தது. [உ-எ]

## இரு பெண் போராளிகள் கட்டுவனில் வீரமரணம்

நேற்று நண்பகல் 11. 30, மணியளவில் கட்டுவன் இராணுவ முகாமிலிருந்து வெளியேற முற்பட்ட படையினருடன் இடம்பெற்ற நேரடி மோதலில் பெண் போராளிகள் இருவர் வீரமரணமடைந்தனர்.

லவனிதா [ரதிமலர் கார்த்திகேசு–கரம்பன்], சங்கரி [மதுராந்தி விமலநாதன் — திருக்கடலூர் திருகோணமலை] ஆகிய இருவருமே வீரமரணமடைந்தனர். [உ-15]

## ஈராக்கிய படை....

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

கள் நிராகரிப்பதாகவும் அவர் சொன்னார்.

குவைத்திலிருந்து தனது படைகள் விரட்டப்படுவதற்கு முன்னர் குவைத்தையும் அதன் எண்ணெய் வளத்தையும் முற்றாக அழித்துவிடும் செயலை சதாம் ஹுசேன் ஆரம்பித்திருக்கிறார் என்றும் —

ரஷ்ய சமரசத் திட்டத்தைக் காட்டி, நேரத்தை இழுத்தடிப்பதன் மூலம், இந்த அழிவுகளை பூர்த்தி செய்யலாம் என சதாம் திட்டமிட்டிருக்கிறார் என்றும் ஜோர்ஜ் புஷ் சொன்னார்.

இதற்கிடையில் பன்னாட்டுப் படைகள் முழு அளவிலான தரைத் தாக்குதலை நேற்று [இலங்கை நேரப்படி நண்பகல் 12. 45 மணியளவில்] ஆரம்பித்து விட்டதாக ஈராக் அறிவித்தது.

ஆனால் ஈராக்கின் இந்த அறிவிப்பை அமெரிக்கா மறுத்துள்ளது.

ஜனாதிபதி மிக்கெய்ல் கோர்பச்சேவின் 8 அம்சத் திட்டத்தின்படியே படை விலக ஈராக் இணங்கியிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

சோவியத்தின் எட்டு அம்சத்திட்டத்தில் உள்ள ஏனைய முக்கிய அம்சங்கள் வருமாறு;

★ சண்டை நிறுத்தம் அறிவிக்கப்பட்ட மறு தினத்தில் இருந்து ஈராக் படைகள் குவைத்தில் இருந்து வெளியேற ஆரம்பிக்கும்.

★ படை விலகலை ஐ. நா மேற்பார்வையிடும்.

★ மூன்றில் இரண்டு பங்கு ஈராக் படையினர் குவைத்தில் இருந்து வெளியேறியவுடன், ஈராக் மீது பொருளாதாரத் தடை விதிக்கும் ஐ. நா. பாதுகாப்புச் சபையின் தீர்மானத்தை விலக்கிக் கொள்ள வேண்டும்.

★ குவைத்திலிருந்து எஞ்சிய ஈராக் படைகள் வெளியேறியதும் ஐ. நா. விதித்த ஏனைய தடைகளை நீக்க ஏற்பாடு செய்யப்படும்.

★ போர்க் கைதிகள் அனைவரையும், சகல தரப்பினரும் பரிமாறிக் கொள்ள வேண்டும். [உ-எ-5]

## ஷெல் தாக்கு!

பலாலி இராணுவ முகாமிலிருந்து நேற்று இரவு 7-00 மணி தொடக்கம் தொடர்ச்சியாக சுற்றுப்புற குடியிருப்புக்களை நோக்கி ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

கட்டுவன், தெல்லிப்பளை, குப்பிளான் பகுதிகளிலேயே அதிகமான ஷெல்கள் விழுந்து வெடித்தன. [உ-15]

## கிளிநொச்சி குண்டு...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

குள் நின்ற மாணவர்கள், ஆசிரியர்கள் பலர் பாதுகாப்பான இடங்களில் தஞ்சம் புகுந்து விட்டதால் தெய்வாதீனமாக உயிரிழப்புக்கள் ஏற்படவில்லை.

கணேசபுரத்தைச் சேர்ந்த ஐயம்பிள்ளை துஷ்யந்தன் [11 வயது] என்ற மாணவனே காலை இழந்தவர் ஆவார். மற்றும் குருகுலத்தைச் சேர்ந்தவர்களான திருநாவுக்கரசு நந்தினி [15 வயது], நிலானி [16 வயது], சி. ஸ்ரீ துஷ்யாணி [12 வயது],- கணேசபுரம், நவரத்தினம் மதிவதனா [10 வயது] ஆகியோர் காயமடைந்தனா.

காயமடைந்த ஐவரில் நிலானி, சி. ஸ்ரீதுஷ்யாணி ஆகிய இருவரும் கிளிநொச்சி ஆஸ்பத்திரியிலும் ஏனையோர் யாழ். ஆஸ்பத்திரியிலும் சேர்க்கப்பட்டுள்ளனர்.

பாடசாலைக்கு அருகிலுள்ள ஜெயந்திநகர் குடியிருப்பு பகுதிகள் மீதும் குண்டுகள் வீசப்பட்டன. இதனால் 4 வீடுகள் சேதமடைந்தன. [ஓ-76-15]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீரமரணம்

மட்டக்களப்பு மாவட்டத்தில் கித்துள் என்ற இடத்தில் விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையில் இடம்பெற்ற நேரடி மோதலில் மணி என்ற போராளி வீரமரணமடைந்தார்.

இந்த மோதலில் இராணுவ தரப்பில் ஏற்பட்ட சேத விவரங்கள் தெரியவரவில்லை.

## முத்தமிழ் விழா பற்றிய கலந்துரையாடல் இன்று

யாழ்ப்பாணம், பெப். 23

விடுதலைப் புலிகள் கலை கலாசாரப் பிரிவினர் நடத்தவுள்ள முத்தமிழ் விழா பற்றிய கலந்துரையாடல் இன்று சனிக்கிழமை காலை 10 மணிக்கு நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாசாலையில் நடைபெறவுள்ளது,

முத்தமிழ் விழா எதிர்வரும் பங்குனி மாதம் [மார்ச்] இறுதியில் தொடர்ச்சியாக 10 நாட்கள் நடைபெறவுள்ளது.

விழா பற்றிய ஆக்கபூர்வமான ஆலோசனைகளையும் — நிகழ்ச்சிகள், விழா ஒழுங்குகள், சுகாதாரம், போக்குவரத்து, ஒலி–ஒளி, மேடை அமைப்பு, சுற்றாடல் பாதுகாப்பு முதலியவற்றில் ஆலோசனைகளையும் — வழங்கக் கூடிய பொதுமக்கள், கலைஞர்கள், எழுத்தாளர்கள், சமூகசேவையாளர்கள். போராட்ட உணர்வுள்ளவர்கள், கவிஞர்கள் அனைவரையும் இந்தக் கலந்துரையாடலில் பங்குபற்றுமாறு விடுதலைப் புலிகள் கலை கலாசாரப் பிரிவினர் அழைப்பு விடுத்துள்ளனர். [ஒ-5]


### சென்றலைற்ஸ் விளையாட்டுக் கழகம்

### வருடாந்தப் பொதுக் கூட்டம்

காலம்: 24 - 02 - 1991 ஞாயிற்றுக்கிழமை
நேரம்: காலை 9. 30 மணி
இடம்: யாழ். மத்திய கல்லூரி

அங்கத்தவர்கள் அனைவரும் தவறாது சமுகம் தரும்படி அன்புடன் அழைக்கப்படுகிறார்கள்.

சென்றலைற்ஸ் விளையாட்டுக் கழகம்

[15892]



### A/L 90

மீட்டல் வினா-விடை வகுப்புகள்

ஆரம்பம்: 23 - 02 - 91

| சனி,ஞாயிறு | வார நாட்கள் |
|---|---|
| 7:30 – Chemistry | 10;30 – Pure Maths |
| 8:30 – Phyiscs | 11:30 – App. Maths |
| 9:30 – Zoology | |
| 10:30 – Botany | |

BOND INSTITUTES

58 A. ஸ்ரான்லி வீதி; யாழ்ப்பாணம்.

[15951]


## மரண அறிவித்தல்

### திருமதி
### கைலாசபிள்ளை தங்கரத்தினம்

காலம்சென்ற மாப்பியன் மில் உரிமையாளர் கைலாசபிள்ளை அவர்களின் மனைவி திருமதி தங்கரத்தினம் 20-02-1991 புதன்கிழமை சிவபதமடைந்துவிட்டார். இவர் யோகரட்ணம், தர்மரட்ணம், அமிர்தரட்ணம், பஞ்சரட்ணம், சுகிர்தரட்ணம் ஆகியோரின் அன்புத் தாயாரும் கனகசபாபதி புவனராணி, தனபாலசிங்கம், விலாசினி, மகேந்திரன் ஆகியோரின் அன்பு மாமியாரும் ரஜனி [சிறீகரன்], ரஞ்சிற் [பூம்பா] ரகுராஜ், ஜெயராஜ், நிமல்ராஜ், ஜெயந், சுரேந், சிவானுஜா, பிரகலாத், பிரதீபன், பிரசாந்தன் ஆகியோரின் அன்புப் பேத்தியும் ரகுராஜ், டிலக்ஷனா ஆகியோரின் பூட்டியும் இராசசுந்தரம், துரைச்சாமி, காலஞ்சென்ற கனகரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 23-02-1991 சனிக்கிழமை பகல் 12 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று மானிப்பாய் பிப்பிலி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

தகவல்:
பஞ்சரட்ணம்.

M. K. பஞ்சரட்ணம்
யோகஸ்பதி, மானிப்பாய். [15665]

## அலம்பில் குண்டு வீச்சில் 4 பேர் காயம்

யாழ்ப்பாணம், பெப். 23

மணலாறுப் பகுதி அலம்பிலில் நேற்று முன்தினம் காலை 8-30 மணியளவில் இடம் பெற்ற பொம்மர் தாக்குதலில் 4 பொதுமக்கள் படுகாயமடைந்தனர். [உ]

## கச்சாய் வீதியில் ஹெலி சூடு

தென்மராட்சி, பெப். 23

சாவகச்சேரி — கச்சாய் வீதியை நோக்கி நேற்று மாலை 4.45 மணியளவில் ஹெலி ஒன்று தாக்குதல் நடத்தியது.

இவ் வீதியிலுள்ள சங்கக் கடை ஒன்றில் பொருள்களை வாங்க நின்ற மக்கள் சிதறி ஓடித் தப்பிக்கொண்டனர், [ஒ-117]

## கொட்டடியில் மீன் சந்தை

யாழ்ப்பாணம், பெப். 23

யாழ்ப்பாணம் மீன் சந்தை நீண்ட காலத்தின் பின்னர் மீண்டும் கொட்டடிப் பகுதியில்—பழைய இடத்திலேயே இயங்க ஆரம்பித்துள்ளது, [ஒ-15[

## யாருடையது?

யாழ்ப்பாணம், பெப். 23

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வரும் வழியில், தாண்டிக்குளம் இராணுவ முகாமில் பயணி ஒருவர் உடுபுடைவைகள் அடங்கிய தமதுசிறிய பொதி ஒன்றை தவறவிட்டிருந்தார். அதனைக் கண்டெடுத்தவர் உதயன் பணிமனையில் ஒப்படைத்துள்ளார். உரியவர் தகுந்த அத்தாட்சிகளைத் தெரிவித்துப் பெற்றுக் கொள்ளலாம். [அ]

## மரண அறிவித்தல்கள்

### பரமானந்தர் தர்மலிங்கம்

[இளைப்பாறிய கிராம சேவையாளர்]

வறுத்தலைவிளானைப் பிறப்பிடமாகவும், மயிலிட்டி தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட பரமானந்தர் தர்மலிங்கம் 20-2-91 இல் உரும்பராயில் காலமானார். இவர் இலட்சுமியின் அன்புக் கணவரும் சுகுமாரன் [பிரான்ஸ்], ஜெயக்குமார் [சவூதி], யசோ [இத்தாலி]; தேவகி [டென்மார்க்], ஜீவகி [ஜேர்மனி], ஜானகி ஆகியோரின் அன்புத் தந்தையும், தேவகாந்தன், புலேந்திரன், சத்தியமூர்த்தியின் மாமனாரும், சரண், பிரஷாந், நிஷாந், சஞ்ஜீவ் ஆகியோரின் அன்புப் பேரனும், செல்லம்மா, சிவசுப்பிரமணியம் [இளைப்பாறிய அதிபர்], அன்னம் அகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

இவரது இறுதிக்கிரியைகள் 20 – 02 – 91 இல் நடைபெற்றன என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகிறோம்.

தகவல்:
குடும்பத்தினர்.

''செல்வமாளிகை''
உரும்பராய் வடக்கு,
உரும்பராய். [15959]

### நல்லதம்பி சரஸ்வதி

நல்லதம்பி சரஸ்வதி காலமானார்.

இவர் நாரந்தனையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், சிங்கப்பூரில் காலஞ்சென்றவருமான நல்லதம்பியின் அன்பு மனைவியும், சிங்கப்பூர் தனபாலசிங்கம், தனலட்சுமி ஆகியோரின் அன்பு அக்காவும், அனந்தலட்சுமி, பத்மாவதி, மகாலெட்சுமி ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற இரத்தினேஸ்வரன், அருமைத்திருநாயகம், பாலதேவன் ஆகியோரின் அன்பு மாமியாரும், நடேசன், தனகுமார், சுகுமார், இராஜலெட்சுமி ஆகியோரின் பெரியம்மாவும், ரமேஸ், சுரேஸ், சுதர்சன், சிவதா, குமரசிறீ, சிவாதரன், தர்சிகா ஆகியோரின் அன்புப் பேத்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் 23–02–1991 சனிக்கிழமை பி. ப. 2-00 மணிக்கு தகனக்கிரியைக்காக இல. 71]2, செட்டித் தெரு, நல்லூர் இல்லத்தில் இருந்து செம்மணி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
[15663] திருமதி பாலதேவன்

### செல்வி
### அருளானந்தம் பிலோமினா

செல்வி அருளானந்தம் பிலோமினா 22-02-1991 இல் காலமானார்,

அன்னார் மயிலிட்டியைச் சேர்ந்த திரு. திருமதி அருளானந்தம் தம்பதிகளின் அன்பு மகளும், திருமதி றோஸ் மரியராணி திருச்செல்வம், திருமதி யசிந்தா தேவராணி சுனில், திருமதி அருளானந்தநாயகி யுவக்கீன், அருள்ஞானசீலி, அருள்மலா, பிரான்சிஸ்[நோர்வே], அருள்ஞானசீலன் [நோர்வே] ஆகியோரின் அன்புச் சகோதரியும், றீகன், றெனா ஆகியோரின் பெரிய தாயாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று [23-2-91] பிற்பகல் 3-00 மணியளவில் பொனிப்பாஸ் 4 ஆம் கட்டை, ஆனைக்கோட்டையில் இருந்து மானிப்பாய் சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச்செல்லப்படும்என்பதை உற்றார், உறவினர்களுக்கு அறியத்தருகிறோம்.

தகவல்:
மி.அருளானந்தம்

4 ஆம் கட்டை,
ஆனைக்கோட்டை. [15664[

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் [பிறைவேட்] லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 23 - 02 - 1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org